# சுதேசமித்திரன்

நமக்குத் தொழில் நாட்டுக்கு உழைத்தல்; இமைபொழுதும் சோராதிருத்தல்.



emagz@thozhan.org

# அடையாள அரசியல்

ஆனந்தம்

ஒன்றுக்கும் உதவாத பிரச்சனையை ஊதி பெரிதாக்கி, நான்கைந்து நாட்களுக்கு அரசியல் வட்டாரத்தை பரபரப்பாக்குவது ஒன்றும் தமிழகத்தில் புதிதல்ல. ஆனால் வள்ளுவருக்கு என்ன போதாத காலமோ, இந்த சிக்கலில் அவர் மாட்டிக்கொண்டது சிறிது துரதிஷ்டவசமானது. தமிழ் மீதும் திருக்குறள் மீதும் பெருமதிப்பு கொண்ட உத்தரகாந்த் மாநிலத்தின் மாநிலங்களவை உறுப்பினர் திருதருண் விஜய், ஏதோ ஒரு பாசத்தில் திருவள்ளுவர் சிலையை கங்கை கரையில் நிறுவ எண்ணியதில் எந்த தவறும் இல்லை. ஆனால், எதிர்பாராத வண்ணம் வாரனாசி பகுதி சாதுக்கள் எதிர்ப்பு தெரிவிக்க, சென்னையின் துறைமுகம் பறக்கும் சாலை திட்டம் போல கிடப்பில் போடப்பட்டார் திருவள்ளுவர். தமிழர்கள் மட்டுமின்றி பிறமொழி அறிஞர்களும் போற்றும் ஒரு மாபெரும் புலவர் அவமதிக்கப்பட்டு, ஒரு பூங்காக்குள் நெகிழித்துனியால் சுற்றப்பட்டு கிடத்திவைக்கப்பட்டார்.






இச்செய்தி, வள்ளுவர் மீது மதிப்பு கொண்ட நம் ஒவ்வொருவரையும் கொதிப்படைய வைத்தது. அடுத்த நாள் ஊடகங்களும், அரசியல்வாதிகளும் ‘சாதி’ ரீதியான அவமதிப்பு போன்ற தகவல்களையும் பகிர்ந்துகொள்ள ஆரம்பித்தனர். சமூக வலைத்தளங்களிலும் பிரச்சனை

தீவிரமாக விவாதிக்கப்பட்டு, அனைத்து தலைவர்களும் ஒருமித்த கண்டனக்குரல்களை எழுப்பினர். தொடர் நெருக்கடிகளால் தற்காலிகமாக தற்போது வேறொரு இடத்தில் சிலை அமைக்கப்பட்டுள்ளதாக கடைசி தகவல். மகிழ்ச்சி..! இச்சம்பவம் பற்றிய ஒரு விவாத நிகழ்ச்சிக்கு தயாராகிக் கொண்டிருக்கும்போது தான் ஒரு சிந்தனை தோன்றியது. திருவள்ளுவர் சிலைக்கு ஏற்பட்ட அவமானம் ஒருபுறம் இருக்க, திருவள்ளுவருக்கு சிலை என்பது அவசியம் தானா? திருவள்ளுவர் மட்டுமல்ல இந்தியா முழுவதும் தெருவுக்கு தெரு நிறுவப்பட்டிருக்கும் சிலைகளும் அவற்றை சுற்றி நடக்கும் அடையாள அரசியலும் நமக்கு அவசியம் தானா?

ஹரித்துவாரில் திருவள்ளுவர் சிலை அமைக்க எதிர்ப்பு தெரிவிக்க முக்கிய காரணமாக சொல்லப்படுவது, யார் என்றே தெரியாத ஒரு தமிழ்ப் புலவரின் சிலை அங்கு ஏன் அமைக்க வேண்டும் என்ற சாதுக்களின் கேள்வி தான். ஒருவேளை நிறுவப்படிருந்தால், கங்கை கரையில் மட்டுமல்ல தமிழகம் தவிர்த்து வேறு எங்குமே ஏதோ தாடி வைத்த சாமியாராக தான் அப்பகுதியினருக்கு அறியப்படுவார். காரணம், திருக்குறள் என்றால் என்ன, அது கூறும் மெய்யியல் என்ன, அதை எழுதியவர் யார், அவரது புலமையும் ஞானமும் எத்தகையது போன்ற எந்த தெளிவும் இல்லாதவர்கள் முன் வள்ளுவரை கொண்டு சேர்ப்பது, கழுதைக்கு தெரியாத கற்பூர வாசனை போலத்தான். ஏற்கனவே லண்டன் பல்கலைக்கழகத்தில் கேட்பாரற்று பொழிவிழந்து கிடக்கும் வள்ளுவர் சிலை போலவே கங்கை கரையிலும் ஆகலாம். இதைத்தான் வள்ளுவர் எதிர்பார்த்தாரா? திருக்குறள் போதித்ததா?

வெளிநாடுகளை, வெளிமாநிலங்களை விட்டுவிடலாம். குமரியில் அமைக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான வள்ளுவர் சிலை கூட தற்போது வெகுவேகமாக பாழடைந்து வருவதாகவும், அதனை புதுப்பிக்க வேண்டும் எனவும் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. ஆக, இங்கே கூட வள்ளுவன் வெறும் அரசியல் சின்னம் மட்டுமே. உண்மையில் வள்ளுவன் நிலை பரவாயில்லை; தமிழகத்தில் அம்பேத்கர் துவங்கி காமராஜர் வரை ஏறக்குறைய அனைத்து தலைவர்களும் இன்று கம்பிப்போட்ட சிறைக்குள் தான் வசிக்கின்றனர். பிறந்த தினம், நினைவு தினங்களில் மாலை போட மட்டுமே பயன்படும் இந்த தலைவர்களின் சிலைகள் நிறுவப்பட்டதன் நோக்கமென்ன? சிலை அமைத்து வழிபட இவர்கள் ஒன்றும் கடவுள்கள் இல்லையே..! சிலை அமைத்து, முச்சந்தியில் நிற்க வைத்து, வருடத்திற்கு ஒரிரு தினங்கள் மட்டுமே கவனிக்கப்பட்டு, கேட்பாரற்று கிடக்கும் இச்சிலைகளுக்கு பின்னால் இருக்கும் அடையாள அரசியல் நமக்கு அவசியம்தானா..! அல்லது கங்கைக் கரையில் வள்ளுவன் நிற்பதனால், கங்கை நீரால் வள்ளுவரோ, வள்ளுவரால் கங்கை நீரோ புனிதம் ஆகப்போகிறதா!? அப்புறம் ஏன் இவ்வளவு ஆர்ப்பரிப்புகள்..? அவனுக்கு அங்கே விருப்பமில்லை எனில் திரும்பக்கொண்டு வந்து

ஏதோவொரு மூலையில் வைத்துவிட வேண்டியதுதானே..! வள்ளுவன் வந்து வேண்டாமென சொல்லிடப் போகிறானா..!!

இந்தியாவின் மிகப்பெரிய சாபக்கேடு இந்த அடையாள அரசியல். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் மக்களை செம்மைப்படுத்த போதிக்கப்பட்டதே வள்ளுவரின் திருக்குறள். ஆனால், உண்மையில் இன்றைக்கு திருக்குறளின் மதிப்பு, தமிழ் முதல் தாளில் வாங்கப்போகும் அந்த 2 மதிப்பெண்கள் தான். உணர்ந்து பின்பற்ற வேண்டிய அரிய கருத்துக்களை மனப்பாடமாகவும், ஒப்புவித்தல் போட்டியாகவும் மட்டுமே மாற்றியது நம் அடையாள அரசியல். நாம் புரிந்துகொள்ள வேண்டியது, திருக்குறள் ஒரு அடையாளம் அல்ல; மனப்பாடம் செய்து மதிப்பெண் எடுக்க உரைக்கப்பட்டதல்ல. அதுபோலவே திருவள்ளுவர் மற்றும் இன்னபிற சிலைகளும். அவர்கள் விட்டுச்சென்ற மாபெரும் கருத்துக்களை, வாழ்க்கை நெறிகளை பின்பற்றாமல், சிலைகளை மட்டும் நிறுவி, சாதி-மத-அரசியல் அடையாளங்களாக உருவாக்குவது தான் அவர்களுக்கு நாம் செய்யும் பெருமையா? கரிகாலனும், ராஜராஜனும், பல்லவர்களும் தத்தம் கற்சிலைகளை அடையாளங்களாக அமைத்திருந்தால், வரலாற்றில் என்றோ காணாமல் போயிருப்பர் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

இறுதியாக, தற்போது திருவள்ளுவர் சிலைக்காக போராடுபவர்களும், கலாம் ஐயா நினைவு மண்டபத்திற்காக குரல் கொடுப்பவர்களுக்கும் நான் வைக்கும் வேண்டுகோள் இவைதான். பெரும்தலைவர்களது உருவங்களை மட்டும் தூக்கிப்பிடித்து இதுவரை நாம் எதுவும் சாதித்ததில்லை. ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகளும் நினைவு மண்டபங்களும் அவர்கள் உருவத்தை பிரதிபலிக்கிறதே தவிர, அவர்களை பிரதிபலிக்கவில்லை என்பதை புரிந்துகொள்வோம். டாக்டர் விக்ரம் சாராபாயின் பெருமையை தாங்கி நிற்கும் இந்தியாவின் மிகப்பெரிய விண்வெளி மையத்தையும், பேரறிஞர் அண்ணாவின் பெயரை தாங்கிபிடிக்கும் ஆசியாவின் மிகப்பெரிய நூலகத்தையும் போல, வள்ளுவன் பெயரில் திருக்குறளை உலக மக்களிடம் எடுத்துச்செல்வதே வள்ளுவனுக்கு செய்யும் பெருமை. எனவே சிலைகளை விடுத்து, அடையாளங்களை தவிர்த்து, அவரது புகழை அவர்தம் குறள்களே பேசட்டும். அவற்றை முழுமையாக மக்களிடம் கொண்டுசேர்க்கும் பணியை மேற்கொள்வதே அவருக்கு ஆற்றும் கடமையாகும். நாம் குரல் எழுப்ப வேண்டியதும், போராட வேண்டியதும் அதற்காக மட்டுமே. அடையாள அரசியலை தூக்கியெறிந்து, அறிவார்ந்த அரசியலை தூக்கிப்பிடிப்போம்.

# குக்கூ காட்டுப்பள்ளி - சவ்வாது மலை அடிவாரம் - ஓர் அனுபவம்

கலைவாணி சுப்பிரமணியன்

கடந்த ஒரு வருட காலமாக TWA (தி வீக்கெண்ட் அக்ரிகல்ட்டரிஸ்ட்) அமைப்பினரை முக நூல் மூலமாக தொடரும் வாய்ப்பு கிடைத்தது அவர்கள் சென்னை மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள விவசாயிகளுக்கு வார இறுதியில் உதவுவதை முழுவீச்சில் செய்து வருபவர்கள், விவசாய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு அந்த அமைப்பினருடன் சேர்ந்து பணியாற்றுவது கடினமாக இருக்காது என தோன்றியது கடந்த மார்ச் மாதம் TWA அமைப்பினருடன் ஆலத்தூர் என்ற கிராமத்தில் மல்லிகை பூ பறித்தல், பச்சை பயறு எடுத்தல் போன்ற வேலைகளை அந்த ஊரைச் சார்ந்த விவசாயிகளுடன் செய்து முடித்தோம். நண்பர்கள் ரசாயனம் அல்லாத இயற்கை விவசாயத்தின் பயன்களை பற்றி விவரித்தனர், அதன் பின்னர் அதே ஊரைச் சார்ந்த மிக இளம் விவசாயியான தோழர் . நித்தியானந்தின் "நல்லக்கீரை" பண்ணையை சுற்றிப் பார்த்தோம், புதிய அனுபவமாக அன்றைய தினம் அமைந்தது, முழுமையான முதல் நிகழ்வாயிற்றே! அதனால் அப்படி ஒரு மகிழ்ச்சி மனதில்.



TWA அமைப்பினருடனான எனது இரண்டாவது பயணம், இரண்டு நாட்களுக்குத் தேவையான பொருட்களுடன் ஆயத்தமாக "குக்கூ" வை நோக்கி சுமார் 30 தன்னார்வல நண்பர்களுடன் கடந்த வரம் ஜூன் 22ம் தேதி கோயம்பேடு பேருந்து நிலையத்தில் இருந்து பயணித்தோம் திட்டமிட்டபடி எங்களது விடியல் குக்கூ அமைந்துள்ள ஜவ்வாது மலையின் வனச்சரக

அலுவலகம் முன்பாக விடிந்தது அங்கிருந்து புத்துணர்ச்சி மிகுந்த மலைக்காற்றை அனுபவித்தவாறு ஒரு சிறிய வாகனம் மூலம் பயணித்தோம் வழிநெடுக அதுவரை கண்ட கண்டிராத மரங்கள், பறவைகளை பற்றிய உரையாடல் நண்பர்களிடையே. இருபது நிமிட பயனத்திற்கு பிறகு குக்கூவை அடைந்தோம். பாரதிராஜா படத்திலும் இயற்கை ஓவியங்களில் மட்டுமே பார்த்த சூழலை அன்று தான் நேரில் பார்க்க நேர்ந்தது. தேஜாவு தருணம் போல! ஆம் நாம் கனவில் கண்ட ஒரு சூழலை நேரில் பார்க்க நேர்ந்தால் அப்படி தான சொல்லனும்!? சின்ன வயசுல நாமல்லாம் படம் வரைய சொன்னா என்ன செய்வோம் "இரண்டு மூன்று மலை போன்ற ஒரு அமைப்பு அதன் நடுவே ஒரு சூரியன் உதிப்பது போன்றும் அதனருகே ஒரு நதி போன்ற அமைப்பும் நதிக்கரையில் ஒரு குடில் போன்ற அமைப்பிலான வீடும் "வரைந்த அனுபவம் நாம் எல்லோருக்கும் இருந்திருக்கும், அப்படி தான் இருந்தது குக்கூ கட்டுப்பள்ளியின் எழில்மிகு தோற்றம் மலைகள் சூழ, நதிக்கு அருகாமையில்.

குக்கூவின் இனிய வரைமுறைகள் எங்களை வெகுவாக கவர்ந்தன. அங்கே ரசாயனம் கலந்த பொருட்களை யாரும் உபயோகிக்கவில்லை பற்பசை கூட யாரும் உபயோகிக்கவில்லை, மண்ணாலான குவளைகளில் பால் கலக்காத தேநீர், காலை உணவாக கேழ்வரகு கூழ் வடிவாம்பாள் பாட்டி அன்புடன் பரிமாறினார், அன்றய தினம் முதல் நிகழ்வாக அங்கே அமைந்திருந்த புளியமரத்தின் அடியில் கலந்துரையாடலுக்காக அனைவரும் அமர்ந்தோம், ஒவ்வொருவராக அறிமுகபடுத்தி கொண்ட பின்னர் எளிமையின் மறு உருவமாக திகழும் சிவராஜ் அண்ணண் பேச தொடங்கினார் அவர் பேசி முதல் முறையாக கேட்கும் எனக்கு ஒரு நிமிடம் உடல் சிலிர்க்கவே செய்தது அவர் பேசியதாவது: குக்கூ ஒரு கேளிக்கைகான இடமோ, கொண்டாடுவதற்கான இடமோ இல்லை என்றும் இந்த சூழலை ஆத்தமார்த்தமாக உணருங்கள் என்றும் அங்கு உள்ள பாட்டி, நேசன், ஜான், முத்து, காளி இவர்களின் வாழ்க்கையின் பின்புலம் பற்றியும் அவர்கள் கடந்து வந்த கடினமான பாதைகள் பற்றியும் அவர்களிடமிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார். பின்னர் "குக்கூ காட்டுப்பள்ளி" ஆசீர்வதிக்க பட்டவர்களை மட்டுமே இந்த இடம் அனுமதிப்பதாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் மட்டுமே இங்கு வாழ்கிறார்கள் என்றும் கூறி அந்த இடத்தின் உன்னதத்தையும் மேன்மையையும் கூறி முடித்தார். பின்னர் அன்றைய தினம் நாங்கள் எந்த மாதிரியான வேலைகளை செய்ய வேண்டுமென்ற குறிப்பினையும் கொடுத்து வழி நடத்தினார். ஜென் கார்டன் அமைப்பதற்காக சிறிய அளவிலான கற்களை நண்பர்கள் கைமாற்று முறையில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு எடுத்து சென்றோம், இடையிடையே உப்பில் ஊறிய நாவல் பழங்களை பாட்டி கொடுத்தனுப்பினார். பின்னர் தாயின் கருவறை போன்ற அமைப்பில்

அமைக்கப்பட்ட மூலிகை தோட்டத்திற்கான பாத்திகளை அமைத்தோம், சிறுது கடினமான வேலையாக இருந்தாலும் நண்பர்களுடன் அயராமல் செய்து முடித்தோம்.



அன்று மாலை குளிப்பதற்காக ஓடைக்கு சென்றோம் "என் புது சிறகு என்னை கேட்காமலே முளைத்துக்கொண்டது" ஒரே ஆட்டம் தண்ணில, சினிமால வர்ற எல்லா heroine introduction songsம் எனக்காக எழுதப்பட்டது போல ஒரு உற்சாக உணர்வு என்னனு சொல்ல தெரியலை.

பின் இரவு அன்றைய முக்கியநிகழ்வாக (Campfire : சுடரொளிக் களியாட்டம்) இரவு உணவிர்கு பிறகு ஒன்று கூடி அமர்ந்தோம் TWA அமைப்பின் ஒருங்கிணைப்பாளர்கள் என்ற முறையில் தோழர் தமிழ்ச்செல்வன், TWA எதற்காக தொடங்கப்பட்டது என்று கூறினார் விவசாயிகளின் முதல் தேவை ஆள் பற்றாக்குறை என்றும் பண உதவியோ பொருள் உதவியேயன்றி உழைப்பை ஏன் தரக்கூடாது என்ற மாற்று சிந்தனை தான் இந்த அமைப்பின் நோக்கம் எனவும், சிறு,
விவசாயிகளின் முக்கியத்துவம், குறைந்த விலையில் சாகுபடிக்கான வழிமுறைகளை விவசாயிகளுக்கு வழங்குதல், விவசாயம் சார்ந்த வல்லுனர்களின் தொடர்பினை மற்ற விவசாயிகளுக்கு ஏற்படுத்தி தருதல், இயற்கை விவசாயம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், கிராமம் சார்ந்த சூழலில் புதிய மனிதர்களுடன் பழகுவதற்கான ஒரு வாய்ப்பினை இன்றைய இளைஞர்களுக்கு வழங்குதல் என அந்த அமைப்பின் சிறப்பம்சங்களை அருமையாகவும் எளிமையாகவும் விளக்கினார் அதைனை தொடர்ந்து தோழர்கள் ராஜேஷ், சரத், ஜனகன் இயற்கை விவசாயம் சார்ந்த கேள்விகளுக்கான பதிலையும், புரிதலையும் எங்களுக்கு தந்தார்கள்.

நம்மாழ்வார் அவர்கள் இயற்கை விவசாயத்திற்காக விதைத்து சென்ற வீரிய வித்துக்கள் இவர்கள்தாம் போலும். அதன்பிறகு சிவராஜ் அண்ணா நம்மாழ்வார் பற்றிய பல நிகழ்வுகளையும், உதாரணங்களையும் பெருமிதத்துடன் விவரித்தார் ஆனால் சிவராஜ் அண்ணா அவர்கள் ஒரு மணி நேரம் பேசினாலும் மண்டியிட்டு கொண்டுதான் பேசினார். அன்றைய இரவு தோழிகளுடன் உறங்குகையில் பயத்தில் கூச்சலிட்டு அனைவரையும் தூங்க விடாமல் தொல்லை செய்தது தனி கதை (மன்னியுங்கள் ரேவதி ,தேவி).



**குக்கூவில் ரம்மியமான இரண்டாவது நாள்:** புதுமண தம்பதிகளைக் கவனிப்பது போல வேளைக்கு சாப்பாட்டிற்கு குறைவே இல்லை. அன்று சிவராஜ் அண்ணா உடன் மலைமலைப்பகுதிக்கு விதைகள் வேட்டையாட சென்றோம் வழியே நீர் மருது மரத்தின் சிறப்பினையும் வயதினை கணிப்பதில் நண்பர்களுக்குள் உரையாடல், இறுதியாக சிறிதளவேனும் சேகரித்த விதைகளோடு கூடாரம் வந்து சேர்ந்தோம்.கிளம்ப வேண்டும் என்றதும் மனதில் ஒரு இனம் புரியாத கலக்கம் தொற்றி கொண்டது. சிவராஜ் அண்ணன் அவர்கள் அந்த சோகத்தை மறக்க செய்வது போல தும்பியின் இரண்டாவது இதழை பரிசாக கொடுத்தார். திரும்ப மனம் மாறுவதர்குள் அனைவரிடமும் விடைபெற்று கிளம்பிவிட்டோம். பயனுள்ள இரண்டு நாட்கள். வாழ்நாள் அனுபவம்.

# 25 years of Economic Reforms

MaheshKumar S T

One of the problems in our public discourse is economic reforms have always been done in stealth. No leader or party has argued with conviction why it is necessary. While as opposition party they will oppose more FDI, but inevitably when in responsibility will simply continue the previous government's policies. Partly this has been due to poor public discourse and lack of awareness of the current young generation of pre 1991 era.



While people in late twenties and early thirties remember how difficult it was to get a Telephone connection when only BSNL was there or how difficult for a gas connection, even they are not aware of how things were before 1991. Till 1982 cement production was completely controlled and we were importing it. The distribution was the monopoly of state and the only person allowed to import was the state. Only in 1982, cement producers were allowed to sell part of their produce directly to market. Rest has to be sold only to state. Imagine waiting at a government office and greasing a government officer to buy cement to build your own home. The partial decontrol helped double production and stop import. Then eventually it was completely de-regulated in 1989. Cements is only one case. It was difficult to import a computer, because that would need government approval. It was difficult to get even an internet connection. It was same in most of the areas. Even today agriculture is heavily regulated. We pledged out

gold for loans and were transferred in tonnes in 1991, which shocked the nation. Only a crisis made it conducive for reforms.

And the outcomes of government in business has been very dismal. A fertilizer plant was setup in West Bengal in 1970, it produced no fertilizer until 2000 and yet the employees were paid at taxpayer’s expense for doing no work. In 1972 Scooters India was setup, which sold no scooters even after next 20 years and had 3000 employees on pay roll. In 1997 it decided to change its “strategy” towards three wheeler. Air-India is posting loss of thousands of crores every year and only recently the loss numbers have come down.

True, private monopoly in a market is bad. But government monopoly is worse than that. Somehow most of us think that public sector work for people's good, which we know is not true. Public sector is just the private sector of those in public office - how appointments and transfers are done, how job promotions happen, how it's considered as a permanent job – clearly reflects that public sector is not being accountable to public. If there is one lesson that mobile revolution taught us, choice to consumers is the key thing. A market offers more choice to consumers, unlike public sector monopoly.

Historically India has been a trade surplus nation. The experience of our founding fathers was shaped by British imperialism - which entered via trade route. They closed our economy unwisely. While stealth reforms have made significant deregulation, further reforms requires more open public discourse. Because without reforming labor laws and land acquisitions laws, we will not be able to generate jobs for the 1.2 crore youth who enter the job market every year.

Lastly, the key priority of any government should be Law and Order, Common Infrastructure, and for a welfare government – ensuring healthcare and education. A government that has failed in all this primary duties, cannot expand its footprint to all other areas – that too as a monopoly. China was worse than India until 1978. But then it unleashed its potential, Thanks to reforms by Deng Xiaoping. We started late by 13 years and our growth trajectory from both this points has been similar, except that we are still opening up in phased manner whereas China did it rapidly.

There is no substitute to individual initiative. Governments can never replace individual aspirations to achieve. And ultimately there is no alternative to choice of consumers that guarantee quality and efficiency. It’s time we unshackle our socialist past and accelerate reforms openly, rather than hoping for another crisis, because not every crisis has a pleasant outcome. We need to only look at USSR - our once-model in socialist planning.

# வல்லரசு?

சக்தி ராகவா



சுரக்காத மார்பு
சுவைக்காத நாவு
உருகி கருக
ஓர் எலும்புக்கூடு

எங்கோ ஒரு தேசம்
எதுவும் இன்றி
இரைதேடும் பறவைக்கு!

இங்கோ பல கூட்டம்
இறந்தோர்க்கு
சிலை வைக்க!

பருந்துக்கென்ன
இறந்தால் இரை
அகண்ட பாரில்
அளவோடு தானோ
அன்பும் அமைதியும்

எச்சில் கூட சுரக்கவில்லை
எப்படி பட்ட காட்சி இது
வறண்டது வாழ்வாதாரம் - கருணை
இருண்டது இது ஆதாரம்

கொடிக்கட்டி பறக்கும் நாடுகளே
எங்கே உமது கொடுக்கும் குணம்
கொடுத்துவிட்டீரோ??

தங்களது கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.
மின்னஞ்சல் : emagz@thozhan.org